28.11.2023

அ.வ.எண்.76/2017

ஜான் மேசியா எல்கார்டின்(C.W.1)

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. வழக்கு பட்டிகை சொத்தை எத்தனை முறை பார்வையிட்டேன் என்றால் 2 முறை பார்வையிட்டேன். மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி இடைக்கால அறிக்கை தாக்கல் செய்ய ஒருமுறையும் அடுத்து பிரதிவாதிக்கு கொடுத்த குறிப்பாணையின் அடிப்படையில் ஒரு முறையும் பார்வையிட்டேன். எனக்கு வழக்கு சொத்தை அளக்க உதவி செய்த நிலஅளவையர் யார் என்றால் ஜெரோம் ஜஸ்டஸ். வழக்கு சொத்தை வாதி மற்றும் பிரதிவாதியின் ஆவணங்களின் அடிப்படையில் தான் அளந்தேன் என்று சொன்னால் இருதரப்பு ஆவணங்கள் மற்றும் கிடப்பு படி அளந்தேன். ஆவணங்களை நன்றாக படித்துபார்த்துதான் அளந்தேனா என்றால் படித்துபார்த்துதான் அளந்தேன். வாதியினுடைய ஆவண எண்.610/1998 என்றால் சரிதான். பிரதிவாதியினுடைய ஆவண எண்.609/1998 என்றால் சரிதான். வாதியினுடைய ஆவணத்தில் 2 இனச்சொத்துகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். 1-வது இனச்சொத்து 8.918 சென்ட் என்று சொன்னால் சரிதான். 2-வது இனச்சொத்து 1.082 சென்ட் என்று சொன்னால் சரிதான். 2-வது இனச்சொத்தில் வழிப்பாதை உண்டு என்று கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோன்று பிரதிவாதியினுடைய ஆவணத்தில் 2 இனச்சொத்துகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். 1-வது இனச்சொத்து 8.918 சென்ட் என்று சொன்னால் சரிதான். 2-வது இனச்சொத்து 1.082 சென்ட் என்று சொன்னால் சரிதான். 2-வது இனச்சொத்தில் வழிப்பாதை உண்டு என்று கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2. வாதிக்கு உரிமைப்பட்ட 2-வது இனச்சொத்திற்கு தெற்கு பக்கம் தான் பிரதிவாதியின் சொத்து என்றால் சரிதான். வழக்கு பி பட்டிகை சொத்தை எனது அறிக்கையில் வழிப்பாதை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பி பட்டிகை சொத்து வழிப்பாதை என்று எதனடிப்படையில் கூறினேன் என்றால் ஆரம்பத்தில் ஒரு நுழைவுவாயில் மற்றும் அதில் ஒரு கேட் போடப்பட்டிருந்தது. மேலும் அதில் கால்தடம் மற்றும் வாகனங்கள் சென்றதற்கான தடமும் காணப்பட்டது. பி பட்டிகை சொத்து பிரதிவாதியின் 1-வது இனச்சொத்தில் சேரவில்லை என்று சொன்னால் சரிதான். பி பட்டிகை சொத்து சென்று முடிவடையக்கூடிய இடத்தில்

வழக்கு ஏ பட்டிகை சொத்தின் தெற்கு பக்கத்தில் இரண்டு கட்டுமானங்கள் உள்ளதாக இரண்டு வரைபடத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அது என்ன கட்டுமானம் என்று சொல்லமுடியுமா என்றால் நாய் வளர்ப்பதற்காக கட்டப்பட்டுள்ளது. எனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் மேற்படி கட்டுமானம் நாய் வளர்ப்பதற்காக கட்டப்பட்டதாக குறிப்பாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான். பி பட்டிகை சொத்திற்கு தெற்கு பக்கமாக நீளமாக ஒரு பூந்தொட்டி கட்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இரண்டு வரைபடத்திலும் வழக்கு ஏ பட்டிகை சொத்தில் கார் நிற்பதாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. ஆணையர் நியமனம் கோரிய மனுவிலோ அல்லது பிரதிவாதி தரப்பில் கொடுக்கப்பட்ட குறிப்பாணையிலோ புகைப்படம் எதுவும் எடுக்கவேண்டும் என்று கூறவில்லை என்று சொன்னால் சரிதான். மேலும் எனது அறிக்கையிலும் நான் புகைப்படம் எடுத்து அதை குறுந்தகடுடன் சமர்ப்பித்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி புகைப்படம் எப்பொழுது எடுத்தேன் என்றால் முதல் முறையாக சொத்தை பார்வையிட சென்றபோது எடுத்தேன். மேற்படி புகைப்படத்தை யார் எடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் ஸ்டூடியோவில் இருந்து ஒருவர் வந்து எடுத்தார். அவர் யார் என்று தெரியுமா என்றால் ஜோஸ் ஸ்டூடியோகாரர் ஆவார். எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. ரசீது வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. இரண்டு முறையும் சொத்தை பார்வையிட சென்றபோது நானும் எனது இளம் வழக்கறிஞர்களும் இருந்தோம் என்று சொன்னால் முதல் முறை சென்றபோது இல்லை இரண்டாவது முறை சென்றபோது இருந்தீர்கள்.

4. முதல் முறை சொத்தை பார்வையிட எப்போது சென்றேன் என்றால் 02.06.2017 ஆகும். மேற்படி தேதியில் சொத்தை பார்வையிட சென்ற விவரம் பிரதிவாதிக்கு தெரியுமா என்றால் தெரியும். எவ்வாறு தெரியும் என்றால் தபால் மூலமாக செய்தி அனுப்பினோம். எந்த தேதியில் எந்த வகையில் மேற்படி செய்தியை அனுப்பினேன்என்றால் 02.06.2017 அன்று அனுப்பினேன். மேற்படி செய்தி அனுப்பிய விவரம் பற்றி எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் ரசீதை அறிக்கையுடன் இணைத்துள்ளேன். மேற்படி புகைப்படங்கள் வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக

எடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எடுத்த புகைப்படத்தில் பிரதிவாதியோ அவரது ஆட்களோ மற்றும் அவரது வழக்கறிஞரோ யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் குறிப்பாணையின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது தான் இரண்டாவது வரைபடம் என்று சொன்னால் சரிதான்.

5. இரண்டாவது முறை வழக்கு சொத்தை பார்வையிட சென்றபோது பிரதிவாதியின் ஆவணத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். இரண்டாவது வரைபடத்தில் வழக்கு ஏ பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் உள்ள பிரதிவாதியின் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள ஏ,பி,சி,டி,இ,ஏ எவ்வளவு விஸ்தீரணம் என்று கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் 9 சென்ட் 940 சதுரலிங்ஸ் என்று குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதியின் ஆவணத்தின்படி வழக்கு ஏ பட்டிகை சொத்திற்கு மேற்கு பக்கம் 8.918 சென்ட் தான் என்றால் சரிதான். மேற்படி வித்தியாசம் எதனடிப்படையில் வந்தது என்றால் வாதி மற்றும் பிரதிவாதியின் ஆவணங்களின் அடிப்படையில் அளந்தபோது மேற்படி வித்தியாசம் காணப்பட்டது. ஆவண எண்.610/1998-இல் பிரதிவாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரிதான். வரைபடம் 1-இல் ஏ பட்டிகை சொத்தின் அளவை ஏ,பி,சி,டி,இ,எப்,ஜி,ஏ என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஏ,பி,சி,டி,இ,எப்,ஜி,ஏ -இன் மொத்த அளவு 8.918 சென்ட் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதிக்கு உரிய 2 இனச்சொத்துகளையும் தனித்தனியாக அளந்து காட்டுமாறு குறிப்பாணையில் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் இரண்டாவது இனச்சொத்தை வரைபடத்தில் எந்த இடத்தில் காட்டியுள்ளேன் என்று சொன்னால் காட்டவில்லை.

6. பிரதிவாதிக்கு அவரது சொத்தில் ஒரு வீடு இருந்தது என்று சொன்னால் சரிதான். ஆனால் கதவு எண்ணை குறிப்பிடவில்லை என்று சொன்னால் கதவு எண் கதவில் இல்லை. தென்னை மரங்களின் வயதை எதனடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் உத்தேசமாக கூறியுள்ளேன். அதேபோன்று நுழைவு வாயிலின் வயதையும் உத்தேசமாக குறிப்பிட்டேன் என்றால் சரிதான். கட்டிடத்தின் வயதை அறிய வேண்டும் என்றால் பொறியாளரின் உதவியுடன் தான் அறிய முடியும் என்று சொன்னால் சரிதான். ஆனால் எந்த பொறியாளரையும் தொடர்பு கொண்டு அறிக்கை எதுவும் பெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

எனது முதல்விசாரணையில் வாதி மற்றும் பிரதிவாதியின் சொத்திற்கு செல்லக்கூடிய பாதைதான் வழக்கு பி பட்டிகை சொத்து என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் வழக்கு பி பட்டிகை சொத்து பிரதிவாதியின் 8.918 சென்ட் சொத்தை சேராது என்றால் சரிதான். முறைப்படி நான் எந்த ஆய்வும் அளவீடும் செய்யாமல் வாதிக்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எனது அறிக்கை மற்றும் வரைபடம் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.